**O.S.No.19/2022**

பி.வா.சா.2, திருமதி.பேச்சியம்மாள்
நாள் :30.01.2024 நேரம் : 11.45 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1) இவ்வழக்கின் 1ம் வாதி சௌந்திரவள்ளி எனது தாயார் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதிகளும், 2ம் பிரதிவாதியும் இருளாயி என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். இருளாயி எனது அம்மாவின் அம்மா என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் இதற்கு முன்பாக இருளாயிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். இருளாயி உயிருடன் இருக்கும் காலத்தில் தாவா சொத்துக்களை எனக்கு 5 வருட சங்கைக்கு ஒத்திவைத்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை தவிர இருளாயி பெயரில் வேறு ஏதேனும் சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது.

2) இருளாயி உயிருடன் இருக்கும்போதே அவரது சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்கு இடையே வாய்மொழியாக பாகம் பிரித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு வாய்மொழியாக பாகம் பிரித்ததற்கு ஏதேனும் ஆதாரங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வாய்மொழியாக பிரிக்கப்பட்டுள்ளதால் ஆதாரங்கள் இல்லை. இருளாயியின் சொத்துக்கள் எந்தெந்த வாரிசுகளுக்கு எந்தெந்த சொத்து பிரிக்கப்பட்டது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. உண்மையில் வாய்மொழியாக பாகம் ஏதும் பிரிக்கப்படாததால் தான் என்னால் யார் யாருக்கு எந்த சொத்துக்கள் பிரிக்கப்பட்டது என்று கூறமுடியவில்லை என்றால் சரியல்ல.

3) தாவா சொத்துக்கள் 2ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்டதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கத்திடமிருந்து தாவா

சொத்துக்களை நான் கிரையம் வாங்கியதற்கு ஏதேனும் ஆதாரங்கள் உள்ளதா என்றால் வாய்மொழியாக கிரையம் பெற்றதால் ஆதாரங்கள் ஏதும் இல்லை. நான் தாவா சொத்துக்களை ஒத்தியின் அடிப்படையில் தான் அனுபவம் செய்து வருகிறேன் என்றாலும், கிரையப்பாத்தியத்தில் அனுபவம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வாதிகளின் பாக சொத்துக்களை அபகரிப்பதற்காக நான் பொய்யாக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளிக்கும் அனைத்து விபரங்களும் 2ம் பிரதிவாதிக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி எங்களது தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான்.

4) நானும், 2ம் பிரவாதியும் வழக்கு தாக்கல் செய்யும்போது ராசியாக இருந்தோம், தற்போது எங்களுக்குள் பேச்சுவார்த்தை கிடையாது. 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கம் ஒத்திப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்பு எவ்வளவு நாட்களுக்குள் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சுமார் 2 மாதத்திற்குள் மனவருத்தம் ஏற்பட்டது. எனக்கும், 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கத்திற்கும் இடையே மனவருத்தம் ஏற்பட்ட விபரத்தை எனது வழக்கறிஞரிடம் கூறினேனா என்றால் சாட்சியம் அளிக்கும் இன்று தான் நான் கூறினேன். இதற்கு முன்பாக 2ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜரானதால் தான் நான் நீதிமன்றத்திற்கு வரவில்லை.

5) 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கம் வழக்கின் உண்மை விபரங்களை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துவிட்டதால் 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கத்தின் மீது நான் பகையாக இருப்பதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கத்திடம் நான் கிரையம் வாங்கியதாக சொன்ன விபரமும், 2ம் பிரதிவாதிக்கு நான் பணம் செலுத்தியதாக சொன்ன விபரமும், உண்மை அல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யான தகவல்களை சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள ஒத்தி தொகையை பெற்றுக்கொண்டு தாவா சொத்துக்களிலிருந்து நான் வெளியேற கடமைபட்டவர்

என்றால் சரியல்ல. நான் பொய்வழக்காடுவதால் தான் எனது தாயார் கூட எனக்கு ஆதரவாக இல்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.10 PM

சாட்சியின் கையொப்பம்.